மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 134, டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

134—

POLLUTION CONTROL WORKS AT ENNORE AREA

***22871—Dr. Beatrix D'Souza:**

Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether Government is aware that Ennore Estuary is developing into a "Hot spot" or highly polluted area; and

(b) if so, steps taken to monitor the area?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எண்ணூர் பகுதியிலுள்ள தொழிற்சாலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளால் அடிக்கடி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட கால இடைவெளியில் கழிவுநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு அதன் தன்மை பகுப்பாய்வு செய்யப்படுகிறது. மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தரத்திற்கு ஏற்ப கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை தொடர்ச்சியாக இயக்கி கழிவுநீர் சுத்தப்படுத்தப்பட வேண்டும் என இத்தொழிற்சாலைகள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளன. அப்பகுதியிலுள்ள தொழிற்சாலைகளில் ஏற்படும் மாசுவினால் சுற்றுப்புறச் சூழல் கெடுவதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்து, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் உன்னிப்பாக கண்காணித்து செயலாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. BEATRIX D'SOUZA : Hon. Speaker Sir, The Manali Ennore area is a complex industrial area and the effluents emitted from those industries, especially the fly-ash and chemicals are hazardous. In technical terms, it may be called "hot spot" or highly polluted areas. The Tamil Nadu Pollution Control Board is the best in the country and doing an excellent job. (Thumping of desks). However the people belonging to the weaker sections of society living in and around Manali and Ennore are at risk. It is also a fishing area and there is the danger of contaminated fish coming into the market. In this connection, I would like to point out that the Government of India has identified 17 categories of industries for intensive monitoring. I would like to know from the Hon. Minister whether

any of these industries come under the category of highly polluted industry.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூர் பகுதியில் இருக்கிற 3 தொழிற்சாலைகள் ஹைலி பொல்யூட்ட் என்று அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று எண்ணூர் எம்.ஆர்.எல். பேக்டரி; இன்னும் ஒன்று அசோக் லேலன்ட்; அடுத்தது எண்ணூர் அனல் மின் நிலையம். இந்த மூன்றும் ஹைலி பொல்யூட்ட் இன்டஸ்ட்ரீஸ் என்று அடையாளம் காட்டப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. BEATRIX D'SOUZA : Hon. Speaker Sir, I understand that the level of collection of statutory consent fees had amounted to Rs. 6 crores in the past. I would like to know whether the collection maintains a high standard because the Pollution Control Board depends on these resources for its various activities.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கிற இந்த 3 தொழிற்சாலைகளும் ஹைலி பொல்யூட்ட் இன்டஸ்ட்ரீஸ்-ஆக இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதியிலே இருக்கிற எண்ணூர் முகத்துவாரம் மாசுபடாமல் இருப்பதற்கு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலம் மாதம் ஒரு முறை கண்காணிக்கப்பட்டு வருகிறது. உரிய நடவடிக்கைகள் அந்த மூன்று தொழிற்சாலைகளிலும் மாசுக் கட்டப்பாடு வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மாதம், 27.10.93 அன்று சேகரிக்கப்பட்ட கழிவு நீர் மாதிரியை எடுத்துப் பார்க்கின்ற போது, எம்.ஆர்.எல். பொறுத்தவரையில் அவர்கள் முறையாக சுத்திகரிப்பு செய்திருக்கிறார்கள். அசோக் லேலன்டைப் பொறுத்தவரையில் சரியாகச் செய்யாத காரணத்தால் அந்த இன்டஸ்ட்ரி இன்செக்யூரிட்டி என்று சொல்லி, மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஒரு நோட்டீசை அவர்களுக்கு அனுப்பி இருக்கிறார்கள். ஒரு மாத காலத்தில் சரி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். எண்ணூர் அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற கழிவு நீர் எல்லாம் பக்கிங்காம் கால்வாயில் விடப்படுகிறது. அதை மாற்றி கடலிலே அந்த எப்ளூவன்டைவிட வேண்டுமென்று மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதை எப்படிச் செய்கிறார்கள் என்பதை அறிய தனிக் கேள்வி போட்டால் தனியாக பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. குப்பன்.

திரு. க. குப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே எம்.ஆர்.எல்., எம்.எப்.எல்., ஐ.ஓ.சி., அசோக் லேலன்ட், பாரி, கோத்தாரி, இ.டி.பி.எஸ்., போன்ற பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகளின் கழிவு நீரை முறையாக அவர்கள் அரசினுடைய அனுமதி பெற்று கடலிலே விடுவதிலே எந்தவிதமான இடர்ப்பாடும் இல்லை. ஆனால் அவர்கள் பக்கிங்காம் கால்வாயிலும், நிலத்திலும் கழிவு நீரை விடுவதால், நிலத்தடி நீர் கெட்டு, அந்தப் பகுதி மக்கள் குடிநீருக்கே சிரமப்படும் சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, அந்தப் பகுதி மக்கள் மாசு கலந்த குடிநீரை உபயோகிப்பதால், 100க்கு 33 சதவிகிதம் குழந்தைகள் உடல் ஊனமுற்ற குழந்தைகளாகப் பிறக்கும் வாய்ப்பு இருக்கிறது என்று மருத்துவச் சான்றுகள் கூறுகின்றன. ஆகவே தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் அந்தப் பகுதியில் இருக்கும் கழிவு நீரை கடலில் விடுவதற்கான ஆக்கபூர்வமான பணிகளைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையை ஏற்று, உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 135, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

135—

செங்கம் பகுதியில் தனி வனக்கோட்டம் அமைத்தல்

***21372**—டாக்டர் பெ. வீரபாண்டியன்* :

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம், புதுப்பாளையம், சாத்தனூர் அணை, கடலாடி, கலசப்பாக்கம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி தனி வனக்கோட்டம் அமைத்திடும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது போன்ற திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம், திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்ட வனக் கோட்டத்திற்குள் அமைந்துள்ளது. ஆனால் செங்கம் ரேன்ஞ்ச் திருப்பூர்